இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 34 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 27 – வியாழக்கிழமை 12 செப்டம்பர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 34: Thiruvalluvar Year - 2055 - Aavani 27 - Thursday 12 September 2024 - Dak 12 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டில் மீண்டும் கார் உற்பத்தியை மேற்கொள்ள

# ஃபோர்டு நிறுவனத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

## ஐடிசர்வ் கூட்டமைப்பின் உயர் அலுவலர்களையும் முதல்வர் சந்தித்து புதிய முதலீடுகளை மேற்கொள்ள கேட்டுக்கொண்டார்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஃபோர்டு நிறுவனத்தின் IMG தலைவர் திருமதி கே ஹார்ட், துணைத் தலைவர் (சர்வதேச அரசாங்க விவகாரங்கள்) மேத்யூ கோட்லெவ்ஸ்கி, ஃபோர்டு இந்தியா இயக்குநர் (அரசாங்க விவகாரங்கள்) டாக்டர் ஸ்ரீபாத் பட் மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, ஃபோர்டு நிறுவனம் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**சிகாகோ, செப். 12 -**

**ஃபோர்டு நிறுவனம் மற்றும் ஐடிசர்வ் கூட்டமைப்பின் உயர் அலுவலர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், உலகின் முன்னணி கார் உற்பத்தி நிறுவனமான ஃபோர்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் கார் உற்பத்தியை மீண்டும் மேற்கொள்ள வேண்டும் என்றும், அவர்களது உலகளாவிய திறன் மையத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும், அமெரிக்காவில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனங்களின் மிகப் பெரிய கூட்டமைப்பான ஐடிசர்வ் கூட்டமைப்பின் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

தமிழ்நாடு உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குவதோடு, அதிக தொழிற்சாலைகளுடன் இந்திய அளவில் முன்னணி மாநிலமாகவும் விளங்குகிறது. தமிழ்நாட்டில் அதிகளவிலான தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், உலக தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்கள், புத்தாக்கத் திட்டங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற புதிய திட்டங்களை பெருமளவில் ஈர்த்திட துறை சார்ந்த கொள்கை அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புகளை கொண்ட தமிழ்நாட்டில், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில் உலகின் 16 முன்னணி நிறுவனங்களுடன் 7016 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக 10.9.2024 அன்று சிகாகோவில் ஃபோர்டு நிறுவனம் மற்றும் ஐடிசர்வ் கூட்டமைப்பின் உயர் அலுவலர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன் விவரங்கள்:

**ஃபோர்டு மோட்டார் நிறுவனம் (Ford Motor)**

ஃபோர்டு நிறுவனம் உலகெங்கிலும் செயல்படும் இரண்டாவது பெரிய அமெரிக்க ஆட்டோமொபைல் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகும். ஃபோர்டு மோட்டார் நிறுவனம் அமெரிக்காவின் மிச்சிகனில் உள்ள டியர்பார்னை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. ஃபோர்டு அதன் உலகளாவிய தொழில் நுட்பம் மற்றும் வணிக தீர்வு மையத்தை சென்னையில் கொண்டுள்ளது,

**ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் கார் உற்பத்தியை மீண்டும் மேற்கொள்ள வேண்டும் என்றும், அவர்களது உலகளாவிய திறன் மையத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.**

இச்சந்திப்பு நிகழ்வில், ஃபோர்டு நிறுவனத்தின் IMG தலைவர் திருமதி கே ஹார்ட், துணைத் தலைவர் (சர்வதேச அரசாங்க விவகாரங்கள்) மேத்யூ கோட்லெவ்ஸ்கி, ஃபோர்டு இந்தியா இயக்குநர் (அரசாங்க விவகாரங்கள்) டாக்டர். ஸ்ரீபாத் பட் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**ஐடிசர்வ் கூட்டமைப்பு (ITServe Alliance)**

ஐடிசர்வ் கூட்டமைப்பு அமெரிக்காவில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனங்களின் மிகப்பெரிய கூட்டமைப்பாகும். இந்த கூட்டமைப்பானது 2,400 உறுப்பினர் நிறுவனங்களுடன் 23 மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது. இது வணிகநட்பு கொள்கைகளுக்காக சட்டரீதியாக துணை புரிகிறது, நெட்வொர்க்கிங் வாய்ப்புகளை வளர்க்கிறது மற்றும் CSR மற்றும் STEM முயற்சிகள் மூலம் உள்ளூர் சமூகங்களை மேம்படுத்துகிறது. ஐடிசர்வ் கூட்டமைப்பு உயர்திறமை பணியாளர்களின் குடியேற்றத்திற்கு சட்ட உதவிகளை புரிகிறது.

**ஐடிசர்வ் கூட்டமைப்பின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஐடிசர்வ் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் ஜெகதீஸ் மொசாலி, இயக்குநர்கள் சிவ மூப்பனார், சம்ப மொவ்வா, சிகாகோ பிரிவு தலைவர் சதீஷ் யலமஞ்சிலி மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் திறன்மிகுந்த இளைஞர்களுக்கு வேலைவாயப்பு அளித்திட தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

## நாடாளுமன்றத் தேர்தல் நேர்மையாக நடந்திருந்தால் மோடி படுவீழ்ச்சியைச் சந்தித்திருப்பார்!

# பா.ஜ.க.வுக்கு ‘இந்தியா’ பற்றிய புரிதல் இல்லை!

## வாஷிங்டனில் ராகுல்காந்தி உரை!

**வாஷிங்டன், செப்.11 -**

**நாடாளுமன்றத் தேர்தல் நேர்மையாக சுதந்திரமாக நடக்கவில்லை என்று அமெரிக்காவில் ராகுல் காந்தி குற்றம் சாட்டினார்.**



மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அமெரிக்காவில் 4 நாட்கள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்கா தலைநகர் வாஷிங்டனில் உள்ள ஜார்ஜ்டவுன் பல்கலைகழகத்தில் மாணவர்களுடன் ராகுல்காந்தி உரையாடினார்.

அப்போது அவர் பேசியதாவது: -

கடந்த நாடாளுமன்றத் தேர்தல், சம வாய்ப்புகளுடன் போட்டியிட்ட தேர்தல் அல்ல. அந்த தேர்தலை நேர்மையான தேர்தலாகவோ, சுதந்திரமான தேர்தலாகவோ நான் கருதவில்லை. கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் தேர்தல் நடத்தப்பட்டது. நேர்மையான தேர்தலாக இருந்தால், பாரதிய ஜனதா 240 தொகுதிகளுக்கு பக்கத்தில் கூட வந்திருக்காது.

**காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கு முடக்கம்!**

தேர்தல் கமிஷன், அவர்கள் விரும்பியதை எல்லாம் செய்து கொண்டிருந்தது. பிரதமர் மோடி நாடு முழுவதும் பிரச்சாரம் மேற்கொள்ளும் வகையில் ஒட்டு மொத்த தேர்தலும் கட்டமைக்கப்பட்டு இருந்தது.

பாரதிய ஜனதாவுக்கு நிதி வசதி சாதகமாக இருந்தது. ஆனால், காங்கிரஸ் கட்சி தனது வங்கிக் கணக்கு முடக்கப்பட்ட நிலையில் தேர்தலில் போட்டியிட்டது. இருப்பினும் மோடி என்ற கருத்தியலை அழித்துவிட்டது.

நீங்கள் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடியை பார்த்தால், அவர் உளவியல் ரீதியாக சிக்குண்டு இருப்பதை உணரலாம். இது எப்படி நடந்தது என்று அவருக்கு புரியவில்லை. பிரசாரத்தின் பாதியிலேயே தனக்கு 300 சீட் கூட கிடைக்காது என்பதை மோடி உணர்ந்துகொண்டார். நிலைமை தவறாக போவது அவருக்கு தெரிந்து விட்டது.

தற்போது, அவரை பதவியில் அமர்த்திய கூட்டணி உடைந்து விட்டது. சரியாக நடுப்பகுதியில் உடைந்து விட்டது. “நான் கடவுளுடன் நேரடியாக பேசுகிறேன்” என்று மோடி சொன்னபோது, அவரை உண்மையிலேயே ஊதித்தள்ளி விட்டோம் என்று உணர்ந்து கொண்டோம்.

தேர்தல் முடிவுகள் வெளியானவுடன் மோடி உருவாக்கி வைத்திருந்த பயம் ஒரே வினாடியில் மறைந்து விட்டது. பல ஆண்டுகள் பாடுபட்டு, நிறைய பணம் செலவழித்து, அந்த பயம் உருவாக்கப்பட்டு இருந்தது. ஆனால், மறைந்து போவதற்கு ஒரு வினாடி தான் ஆனது என்றார்.

மேலும் வாஷிங்டன் புறநகரான ஹெர்ன்டானில் அமெரிக்க வாழ் இந்தியர்களிடையே ராகுல்காந்தி பேசியதாவது: -

ஆர்.எஸ்.எஸ். சில மாநிலங்கள் மற்ற மாநிலங்களை விட தாழ்ந்தது என்றும், சில மொழிகள் மற்ற மொழிகளை விட தாழ்ந்தது என்றும், சில மதங்கள் ஒரு மதத்தை விட தாழ்ந்தவை என்றும் நினைக்கிறது. இது பற்றித்தான் இந்தியாவில் சண்டை நடக்கிறது.

தமிழ், மராத்தி,வங்காளம், மணிப்பூரி ஆகியவை தாழ்ந்த நிலையில் உள்ள மொழிகளாம்.

இந்த பிரச்சினைகள் வாக்குச் சாவடியிலும், மக்களவையிலும், சட்டசபையிலும்தான் முடிவடையும்.

எந்த பிராந்தியத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எல்லோருக்குமே வரலாறு இருக்கிறது. பாரம்பரியம் இருக்கிறது, மொழி இருக்கிறது. ஒவ்வொரு பிராந்தியமும் மற்றவற்றைப் போல் முக்கியமானதுதான்.

**மாநிலங்களின் ஒன்றியமே இந்தியா!**

பா.ஜனதாவுக்கு ‘இந்தியா’ பற்றிய புரிதல் இல்லை. மாநிலங்களின் ஒன்றியமே இந்தியா என்று அழைக்கப்படுகிறது. அரசியல் சாசனத்தில் அது தெளிவாக எழுதப் பட்டுள்ளது.

‘பாரத் எனப்படும் இந்தியா, மாநிலங்களின் ஒன்றியம் என்று கூறப் பட்டுள்ளது. அதாவது, மொழிகள், பாரம்பரியம், சரித்திரம் ஆகியவற்றின் ஒன்றியம். இது ஒன்றியம் அல்ல என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றே ஒன்றுதான் மிகவும் முக்கியமானது. அதன் தலைமையகம் நாக்பூரில் இருக்கிறது.

சாதிவாரி கணக்கெடுப்பு நிறுத்தப்பட முடியாத யோசனையாகி விட்டது. சாதிவிவரங்களுடன் கூடிய கணக்கெடுப்பை தவிர வேறு எதையும் ஏற்க முடியாது.

**‘மோடியை நான் வெறுக்கவில்லை’!**

நான் மோடியை வெறுக்கவில்லை. அவருக்கென ஒரு கருத்து உள்ளது. அந்த கருத்துடன் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால் அவரை வெறுக்கவில்லை. அவரது கண்ணோட்டம் வேறு. எனது கண்ணோட்டம் வேறு.

இவ்வாறு அவர் பேசினார்.

---

## தனியார் ஆலோசனை நிறுவனம் மூலம் நிதி பெற்றதாக புதிய புகார்!

# செபி தலைவர் மீது ஹிண்டன்பர்க் நிறுவனம் மீண்டும் குற்றச்சாட்டு!

## நாடாளுமன்றத்திற்கு அழைத்து விசாரிக்க வேண்டும் – எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்!

புதுடெல்லி, செப். 12 –

செபி தலைவர் மாதவி புச் மீது ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் மீண்டும் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளது. தனியார் ஆலோசனை நிறுவனம் மூலம் நிதி பெற்றதாக புதிய புகார் எழுந்துள்ளது. பங்குச்சந்தை முறைகேடு குற்றச்சாட்டில் செபி தலைவரை நாடாளுமன்றத்திற்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை ஒழுங்குமுறை வாரியமான, செபியின் தலைவராக பணியாற்றி வரும் மாதவி புச் மீது, அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் அண்மையில் பரபரப்பு குற்றச்சாட்டை வைத்தது. அதில், அதானி குழுமத்தால், வெளிநாடுகளில் உருவாக்கிய நிறுவனங்களில், செபியின் தலைவர் மாதவி புச் மற்றும் அவரது கணவர் பல்லாயிரக் கணக்கான பங்குகளை வைத்திருந்தனர் என்று குற்றம் சாட்டியது. இதனிடையே மாதவி புச் விதிமுறைகளை மீறி ஐசிஐசிஐ வங்கியிடம் இருந்து ஊதியம் மற்றும் பங்குகள் என சுமார் 17 கோடி ரூபாய் பெற்றதாக காங்கிரஸ் குற்றம்சாட்டியது. இதனை அடுத்து, மாதவி புச் தனது பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்று கோரி மும்பையிலுள்ள செபி தலைமையகம் முன்பு ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

சிங்கப்பூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் அகோரா ஆலோசனை நிறுவனத்தில் செபி தலைவர் மாதவி புச், 99% பங்குகளை வைத்திருப்பதாகவும் இந்த நிறுவனம் செபி கட்டுப்பாட்டில் உள்ள மகிந்திரா, ஐசிஐசிஐ வங்கி, டாக்டர் ரெட்டிஸ், பிடிலைட், செம்கோப், விசு லீசிங் அண்டு பைனான்ஸ் ஆகிய 6 நிறுவனங்களிடம் பணம் பெற்றுள்ளதாகவும், தன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்காமல் மாதவி பூச் அமைதியாக உள்ளார் என்றும் ஹிண்டன்பர்க் நிறுவனம் குற்றம்சாட்டி உள்ளது.

2016–2017, 2023–2024 காலகட்டங்களில் தனியார் நிறுவனங்களிடம் இருந்து மாதவி புச்சின் அகோரா நிறுவனம், 2 கோடியே 95 லட்சம் ரூபாய் நிதி பெற்றதாகவும் குறிப்பாக மகிந்திரா நிறுவனத்திடம் இருந்து மட்டும் 88% பணம் பெற்றதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனிடையே, பங்குச்சந்தை முறைகேடு குற்றச்சாட்டில் செபி தலைவரை நாடாளுமன்றத்திற்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. நாடாளுமன்ற பொது கணக்கு குழு கூட்டம், அதன் தலைவரும் காங்கிரஸ் மக்களவை உறுப்பினருமான கே.சி.வேணுகோபால் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் செபி நிர்வாகம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும், அதன் தலைவர் மாதவி புச்சுக்கு நாடாளுமன்ற பொது கணக்கு குழு சம்மன் அனுப்ப வேண்டும் என்று திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் சௌகதா ராய் வலியுறுத்தினார்.